Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, AUGUST 31, 2022

புதன்கிழமை, 31 ஒகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 089 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# தீப்பிடிக்கும் வரை காத்திருக்கின்றனர்



■ பா.நிரோஸ்

ஒரிடத்தில் சுழன்றுக் கொண்டிருக்காது நாட்டுக்காக ஒன்றிணைந்து உலகத்துடன் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும் என தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்ப சம்பிரதாய அரசியலைக் கைவிட்டு அனைவரும் செயற்பட வேண்டும் எனக்கூறி, நாட்டுக்கான ஒன்றிணையுமாறு சகல கட்சிகளுக்கும் மீண்டும் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

## இடைக்கால பட்ஜெட் சாராம்சம்


### அதிரடித் தீர்மானங்கள்

■ பா.நிரோஸ்

- வரித் திருத்தம்
- புதிய முன்மொழிவுகள்
- ஒதுக்கீடுகள்
- நிவாரணம்
- பொருளாதாரம்
- அபிவிருத்தி
- வேலை வாய்ப்பு
- அரச நிறுவனங்கள்
- புதிய சட்டங்கள் மற்றும் திருத்தங்கள்

## 109ஆவது ஜனன தினம்...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர், மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தினமான நேற்று (30), ஜனாதிபதி செயலக வளாகத்தில் உள்ள ஐயாவின் உருவச் சிலைக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் மாலை அணிவித்தார்.



## சீன தூதுவரின் பதிவை மீளப்பெற கோரிக்கை

■ எம்.றொசாந்த்

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வு தொடர்பாக இலங்கைக்கு ஆதரவாக சீனத் தூதுவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவை மீளப் பெற வேண்டுமென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## ஜோன்ஸ்டனுக்கு எதிராக அதிகுற்றப்பத்திரம் தாக்கல்

ஊழல் வழக்கில் பிரதிவாதிகளாகப் பெயரிப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே முன்னிலையில், நேற்றையதினம் (30) அதி குற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

தொடர்ச்சி P2

## 35 நாடுகளுக்கு புதிய விசா

சுற்றுலாப் பயணிகளுக்காக புதிய நீண்ட கால விசா முறைமையை அறிமுகம் செய்ய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## உறவுகளுக்கு நடந்தது என்ன?

### வடக்கிலும், கிழக்கிலும் கவனயீர்ப்பு போராட்டம்

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால் வடக்கிலும், கிழக்கிலும் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான நேற்று (30), இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




தொடர்ச்சி P2

## சீனாவின் தீர்மானத்திலேயே எமது தீர்மானம் தங்கியுள்ளது

### சஜித்திடம் ஐ.எம்.எப் பணிக்குழு எடுத்துரைப்பு

ஐ.எம்.எப்புடன் இலங்கை முன்னெடுக்கும் பணியாளர் மட்ட பேச்சுவார்த்தைகள் இன்னமும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளதாகவும், இறுதித் தீர்மானம் எப்போது எட்டப்படும் என்ற திகதியை அறிவிக்க முடியாது எனவும் இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவிடம் தெரிவித்துள்ளனர்.



தொடர்ச்சி P2

## ஒரே மேசையில் கூடி விவாதிக்க வேண்டும்

### ஒருங்கிணைக்கும் பணிகளை ஜப்பான் முன்னெடுக்கும்

இலங்கையின் கடன் நெருக்கடி நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர் நாடுகளும் ஒன்றிணைவது அவசியமானது என ஜப்பான் நிதி அமைச்சர் ஷூனிச்சி சுசுகி தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் இலங்கையின் ஏனைய கடன் வழங்குநர் நாடுகளை ஒருங்கிணைக்கும் பணிகளை ஜப்பான் முன்னெடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

ஐ.எம்.எப் – இலங்கை இணக்கப்பாட்டின் பின்னர்

## இலங்கைக்கு முழுமையான உதவிகளை வழங்க தயார்

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு ஒன்றை எட்டிய பின்னர், அதனூடாக இலங்கைக்கு முழுமையான உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## வடக்கில் மழை வெளுத்து வாங்கும்

■ எம்.றொசாந்த்

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் அவ்வப்போது பரவலாக, மிதமானது முதல் கனமானது வரை மழை நீடிக்க வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு

## நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்

### ஐ. நா, அமெரிக்கா, சர்வதேச மன்னிப்பு சபை, சர்வதேச செஞ்சிலுவை குழு வலியுறுத்து

வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் 5 ஆண்டுகளாக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில்,காணாமல் போனோர் தொடர்பான வழக்குகளில் எந்த முன்னேற்றமும் இல்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச அமைப்புகள், காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பதே தெரியாத நிச்சயமற்ற தன்மை, இன்னமும் வேதனையுடன் தொடர்கின்றது.

தொடர்ச்சி P2


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் போராட்டத்தில்

## கண்ணீர் புகை, நீர்த்தாரை பிரயோகம்: பேராட்டக்காரர்கள் பலரும் கைது

அனைத்து பல்கலைகழக மாணவர்களின் ஒன்றியத்தினால் நேற்று (30) கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகை தாக்குதல் மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்ட பொலிஸார், போராட்டக்காரர்களில் 25 இற்கும் அதிகமானவர்களை கைது செய்திருந்தனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழிற்சங்க கூட்டமைப்புகள், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர் உள்ளிட்டோரை விடுதலை செய்ய வலியுறுத்தியும், அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட்ட இந்த பேரணியானது, கொழும்பு - மருதானையிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணி மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


தொடர்ச்சி P2



## தேசிய சபைக்கான புதிய வரைபு

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்த தேசிய சபையை உருவாக்குவதற்கான முழுமையான வரைபு பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் சகல கட்சி தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சகல கட்சிகளின் யோசனைகளையும் எழுத்து மூலமாக பெற்றுக்கொண்டு புதிய வரைபொன்றை அடுத்த கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல், பாராளுமன்ற செயற்குழுக்களை விரைவாக நியமிப்பதற்கும் ,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தேசிய சபைக்கான புதிய வரைபு

புதிதாக சில செயற்குழுக்களை உருவாக்கி அதற்கான வேலைத்திட்டங்களை வழங்குவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய சகல கட்சிகளும் முன்வைக்கும் யோசனைகளை எழுத்து மூலமான பெற்றுக்கொண்ட பின்னர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் புதிய வரைபொன்றை முன்வைக்க பிரதமர் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கண்ணீர் புகை, நீர்த்தாரை பிரயோகம் பேராட்டக்காரர்கள் சிலரும் கைது

கொழும்பு - மருதானையிலிருந்து ஆர்ப்பாட்ட பேரணி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த போராட்டத்திற்கு எதிராக பெறப்பட்ட தடை உத்தரவை போராட்டக்காரர்களிடம் பொலிஸார் வாசித்து காட்டியுள்ளனர். இதனை தொடர்ந்தும் ஆர்ப்பாட்ட பேரணி கொழும்பு கோட்டையை நோக்கி நகர முற்பட்ட போது மருதானை டெக்னிக்கல் வீதிப்பகுதியில் ஏராளமான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதில் ஒரு சில ஆர்ப்பாட்டக்காரர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக அதிகுற்றப்பத்திரம் தாக்கல்

2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், சதொச நிறுவனத்தின் ஊழியர்களை அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, லங்கா சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் ஜோன்ஸ்டனின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அதிகுற்றப்பத்திரம் பகிரப்பட்டது.

மேலும், பிரதிவாதிகள் மூவரையும் தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினமாக ஒக்டோபர் 21ஆம் திகதியை நிர்ணயித்தார்.

குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு எதிராகவும் இலஞ்ச சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் நான்கு குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

முதலாவது பிரதிவாதியான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது சதொச ஊழியர்களை சட்டவிரோதமான முறையில் தேர்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தியதாக ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

முன்னர் வாபஸ் பெறப்பட்ட குற்றப் பத்திரத்துக்குப் பதிலாக, கடந்த மே மாதம் 30ஆம் திகதியன்று புதிய குற்றப் பத்திரத்தை கொழும்பு மேல் நீதிமன்றத்தில், ஆணைக்குழு தாக்கல் செய்தது.

தொழிநுட்பக் கோளாறு காரணமாக குற்றப் பத்திரத்தை வாபஸ் பெறுவதற்கு ஆணைக்குழு தீர்மானித்ததை அடுத்து, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட மூவரை ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் ஜனவரி 28ஆம் திகதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தீப்பிடிக்கும் வரை காத்திருக்கின்றனர்

எஞ்சியுள்ள அடுத்த நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு -செலவு திட்டம் மீதான ஆரம்ப உரையை நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் நேற்று (30) ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நிலைமையை விளங்கிக்கொள்ளாத சிலர் தீப்பிடிக்கும் வரையில் காத்திருக்கிறார்கள். ஆனால் நிலைமைகளைப் புரிந்துக்கொண்டவர்கள் தீயை அணைக்க முயல்கின்றனர் என்றார்.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை தற்போது ஆட்சியில் உள்ள புதிய அரசாங்கம் திருத்தியுள்ளது. புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரையிலும் இந்த வருடத்தின் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கான அரசாங்கத்தின் செலவீனங்களுக்காக இடைக்கால வரவு- செலவு திட்டம் கொண்டுவரப்படும் எனக் கூறியிருந்தார். இதன்படி, எஞ்சியுள்ள அடுத்த நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு-செலவு திட்டத்தை சபையில் பிரதமர் தினேஸ் குணவர்தன சமர்ப்பித்திருந்தார். இதன்படி இடைக்கால வரவு செலவு திட்டம் மீதான ஜனாதிபதியின் உரையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டன.

முன்னொருபோதும் இல்லாதவகையில் நாடு பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இது தொடர்பில் முன்பு பல தடவைகள் பேசியிருக்கிறேன். ஆனால் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை எவ்வளவு மோசமாகியுள்ளது என்பதை பலர் இன்னும் புரிந்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்றார்.

நாடு 74 வருடங்களுக்கு பின்னோக்கி சென்றுள்ளதாக சிலர் கூறுக்கொண்டுப் போராடி வருகிறார்கள். தங்களது அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறு சிலர் கூறுவதே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம். வெளிநாடு முதலீடுகள் தொடர்பில் இலங்கை இதுவரையில் தவறான கொள்கையையே கொண்டிருக்கிறது. நாட்டின் வளங்கள் எனக் கூறிக்கொண்டு அந்த வளங்களைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளாது இருக்கிறோம்.

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு முதலில் சம்பிரதாய அரசியலை கைவிட வேண்டும். கடந்தக் காலத்தை எண்ணி சாபம் விடுவதாலோ அல்லது ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாலோ பிரச்சினையை தீர்க்க முடியாது. வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மறுசீரமைக்க பார்க்கிறோம். பாடசாலைகள், பல்கலைக்கழங்கள் மீள திறக்கப்பட்டுள்ளன. எரிபொருள், எரிவாயு என்பன தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகின்றன. எனினும் இதனால் திருப்தியடைய முடியாது. 25 வருடங்கள் பின்பற்றக்கூடியப் பொருளாதாரக் கொள்கை ஒன்று உருவாக்கி அதனை பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார். தேசிய பொருளாதார கொள்கை ஒன்றை நாம் உருவாக்கப் பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நிறைவுற்றதும் அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பேன். அரசாங்கத்தின் வருமானம், தேசிய உற்பத்தியை ஆகியவற்றை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## 35 நாடுகளுக்கு புதிய விசா

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக, 6 மாதங்கள் தங்குவதற்கான 5 வருட நுழைவு சுற்றுலா விசாவை 35 நாடுகளுக்கு வழங்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாகவும், அதற்கமைய,1 வருட பல நுழைவு மற்றும் ஒற்றை நுழைவு சுற்றுலா விசாக்களுக்கு மேலதிகமாக புதிய விசாவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் 30 நாட்களுக்கு வழங்கப்பட்ட 1 வருட பல நுழைவு மற்றும் ஒற்றை நுழைவு சுற்றுலா விசாக்கள் தற்போது 06 மாத காலத்துக்கு வழங்கப்படுகின்றன. இதற்கமைய, 6 மாதங்கள் தங்குவதற்கான புதிய 5 வருட பல நுழைவு சுற்றுலா விசா வழங்கப்படுவதாக அவர் டுவிட் செய்துள்ளார்.

## ஒரே மேசையில் கூடி விவாதிக்க வேண்டும்

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள கடன் நெருக்கடியில், இருதரப்பு கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைக்கு, இந்தியா, சீனா உள்ளிட்ட தமது பெரிய கடன் வழங்குநர் நாடுகளை ஒன்றிணைக்குமாறு ஜப்பானை கோருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் சர்வதேச ஊடகமொன்றில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கையின் கடுமையான சமூக-பொருளாதார நிலைமைகள் குறித்து தாம் கவலையடைவதாக தெரிவித்துள்ள சுசுகி, நிதி நெருக்கடியை சமாளிக்க பிணை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்த வேண்டும், அதேவேளையில் சீனா மற்றும் இந்தியா உட்பட அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களும் இந்த பிரச்சினையை ஒரே மேசையில் கூடி விவாதிக்க ஒன்றிணைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ள இலங்கை அரசாங்கம் தனது பொருளாதார மற்றும் நிதி நிலைமைகளை சர்வதேச நாணய நிதியம், பாரிஸ் கிளப் மற்றும் ஏனைய தரப்புடன் ஒருங்கிணைத்து, வெளிப்படைத்தன்மையைப் பேணுவதன் மூலம் நிலைமைகளை மேம்படுத்த முயற்சிப்பது முக்கியம் நம்புவதாகவும் சுசுகி கூறினார்.

## இலங்கைக்கு முழுமையான உதவிகளை வழங்க தயார்

இலங்கை மீண்டும் செழிப்புக்கான பாதையில் பயணிப்பதை உறுதி செய்வதற்காக அமெரிக்கா மற்றும் இலங்கை வர்த்தகங்கள் ஒத்துழைக்கக்கூடிய வழிகள் குறித்து இரு நாட்டு வர்த்தக சபையுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், அமெரிக்கா மற்றும் இலங்கை இருதரப்பு வர்த்தக செயற்பாடுகள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதை ஆதரிக்கிறதுடன், இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய அளவிலான பங்களிப்பையும் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## செலவீனங்களை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டமே அவசியம்

சீனாவுடன் இலங்கை முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளை பொறுத்தே ஐ.எம்.எப்பின் தீர்மானங்களும் அமையும் எனவும் தெரிவித்துள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சி தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்களை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (30) சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன்போது கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் வேளையில் தேசிய வங்கிக்கட்டமைப்புக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் சர்வதேச கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களை கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும், ஊழல் மோசடிகளை முழுமையாக கட்டுப்படுத்தும் தீர்மானங்களை அரசாங்கத்திடம் முன்வைக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் ஐ.எம்.எப்புடன் இலங்கை முன்னெடுக்கும் பணியாளர் மட்ட பேச்சுவார்த்தைகள் இன்னமும் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளதாகவும், இறுதித் தீர்மானம் எப்போது எட்டப்படும் என்ற திகதியை அறிவிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ள பணியாளர் குழு, சீனாவுடன் இலங்கை முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளை பொறுத்தே ஐ.எம்.எப்பின் தீர்மானங்களும் அமையும் என்பதை தெரிவித்துள்ளனர்.

## சீன தூதுவரின் பதிவை மீளப்பெற கோரிக்கை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று (30) ஊடகவியலாளர்களை மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் சந்தித்தனர். அதன்போது கருத்து தெரிவிக்கையிலையே அவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், “அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு யுத்தத்தின் போது தமிழர்கள் அனுபவித்த துன்பங்களை சீனா நன்கு அறிந்திருக்கிறது.

“இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்துவதன் மூலம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நீதியைப் பெறுவதே எமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை.

“தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், சிவில் சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் நாம் கூட்டாக இணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரப்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு நேற்றைய தினம்தான் கடிதம் அனுப்பியிருந்தோம்.

“இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்குமாறு ஐ.நா மனித உரிமை ஆணையத்தை வலியுறுத்தும் கடிதத்தை தமிழர்கள் ஐக்கியமாக அனுப்பிய அதே நாளில், சீனத் தூதுவர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக டுவிட் செய்துள்ளார்.

“சீனத் தூதரகத்தின் குறித்த கருத்தானது இலங்கையில் தமது ஆதிக்கத்தை லப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதனால்தமிழ் மக்கள் விரோத மனப்பான்மை கொண்டுள்ள சீனாவின் ஆதிக்கம் வடக்கு கிழக்கில் அதிகரித்து வருவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்” என்றனர்.

## உறவுகளுக்கு நடந்தது என்ன?

இலங்கை அரசின் ஆயுதப்படைகளிடம் ஒப்படைக்கப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கான நீதியை வேண்டி காணாமலாக்கப்பட்டோருக்கான உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய வடக்கில், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முன்றலில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், யாழ். மாவட்டத்தில் நாவலர் வீதியில் உள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலக முன்றலிலும் மற்றும் யாழ். நகரிலும் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலிலும், வவுனியாவில் வவு.குடியிருப்பு பிள்ளையார் கோயில் முன்றலிலும்,மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர்ப்பகுதியிலும், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரப் பகுதியிலும், திருகோணமலையில் திருமலை மாவட்ட செயலக முன்றலிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை அரசின் ஆயுதப்படைகளிடம் ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நடந்தது என்ன? என்பதை வலியுறுத்தியும், காணாமலாக்கப்பட்ட குற்றங்களுக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியும் நூற்றுக்கணக்கான உறவுகள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது உறவுகளுக்கான நீதி வேண்டும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும், இன அழிப்புக்கு நீதி வேண்டும், ராஜபக்ஷ

குடும்பத்தை கைது செய் என்ற கோஷங்களை எழுப்பியவாறு, வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதுடன் அவ்விசாரணைகள் மூலம் தமக்கான நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என வலியுறுத்தியும், இனிவருங்காலங்களில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளகப்பொறிமுறைகள் எவற்றையும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதையும், அரசாங்கம் தொடர்ந்து எம்மை ஏமாற்றுவதை நிறுத்த வேண்டும் எனவும் உறவுகள் வலியுறுத்தினர்.

# நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு இடைவிடாமல் கேட்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட தரப்புக்கான நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பதே தெரியாத நிச்சயமற்ற தன்மை, இன்னமும் வேதனையுடன் தொடர்கின்றது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு இடைவிடாமல் கேட்கிறார்கள். பதில்கள் இல்லாமல், அவர்கள் ஒவ்வொரு நாளும் வேதனைப்படுகின்றனர். உண்மை மற்றும் நீதிக்கான தேடலில் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு, வலுக்கட்டாயமாக காணாமல் போதலில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையில் (ICPPED) கையெழுத்திட்டதமாய், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் (OMP) என்பவற்றை முன்னெடுத்தமை ஆரோக்கியமான நகர்வாகும். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கும், அவர்களின் குறைகளை சர்வதேச தரத்திற்கு ஏற்ப நிவர்த்தி செய்வதற்கு நம்பகமான செயல்முறைகளை வழங்குவதற்கும் மேலும் பலவற்றைச் செய்ய வேண்டும். அதேபோல், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்களுடன் இணைந்து செயற்பட தயாராக உள்ளது. அவர்களுக்கான உதவிகளை பெற்றுக்கொடுப்பதுடன், குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளை நாங்கள் தொடர்ந்து ஊக்குவிக்கிறோம் என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர்-ஹம்டி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்பு சபை

1980 களில் இருந்து இலங்கையில் 60,000-100,000 காணாமல் போன சம்பவங்கள் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன. அதேபோல், வடக்கில் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் 5 ஆண்டுகளாக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில்,காணாமல் போனோர் தொடர்பான வழக்குகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.

காணாமல் போன அவர்களது அன்புக்குரியவர்கள் மீதான வழக்குகளை முடிவுக்கு கொண்டுவர உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளுக்கான குடும்பங்களின் உரிமைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை, மரியாதை மற்றும் வசதிகளை வழங்க வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை குழு

இலங்கையில் காணாமல் போனவர்கள் எங்கிருக்கின்றார்கள், அவர்களது நிலைமை குறித்து பதில்களை வழங்குவதற்கான பொறிமுறையொன்றை சர்வதேச செஞ்சிலுவை குழு முன்வைத்துள்ளது. அத்துடன், சர்வதேச காணாமல்போனவர்கள் தினத்தில், சர்வதேச ரீதியில் மோதல் காரணமாகவும் வன்முறைகள், பேரிடர்கள், இடம்பெயர்வு, மனிதாபிமான அவசர நிலை போன்றவற்றினாலும் காணாமல்போனவர்கள் அல்லது குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களை சர்வதேச செஞ்சிலுவை குழு நினைவுகூறுவதாகவும் தெரிவித்துள்ளது. இந்த பிரச்சினைகளை கையாள தேசிய கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்குதல் போன்றவை சர்வதேச பிரச்சினைக்கு தீர்வை காண உதவக்கூடும் என சர்வதேச செஞ்சிலுவை குழு தெரிவித்துள்ளது.

காணாமலாக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர், மற்றும் பாதிக்கப்பட்ட தரப்புடனும், இது குறித்து தொடர்ச்சியாக செயற்பட்டு வரும் சிவில் அமைப்புகள் தனி நபர்களுடன் நாம் நிற்கின்றோம். இலங்கையர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் நிலைமை குறித்து வெளிப்படைத்தன்மை மற்றும் அவர்களின் அரசாங்கத்திடமிருந்து பதில்களுக்கு காத்திருக்கின்றனர் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் மழை வெளுத்து வாங்கும்

யாழில் நேற்று (30)இடங்களில் மழை பெய்துள்ளது. அந்நிலையில் அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு எதிர்வு கூறப்பட்டது.

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது பெய்யும் மழை, செப்டெம்பர் 5 வரை தொடர வாய்ப்புள்ளது.

மேலடுக்கு சுழற்சியானது மிகப் பரந்த பரப்பில் செல்வாக்கு செலுத்துவதன் காரணமாக மழை கிடைக்கும் போது செறிவான மழை பெய்யும் என்பதுடன் இடிமின்னல் தாக்கமும் ஏற்படும்.

அத்துடன் இந்த வளிமண்டல சுழற்சி அடுத்த சில தினங்களில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளையும் உள்ளடக்கியே அரபிக்கடல் நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகிறது.

# இடைக்கால பட்ஜெட் சாராம்சம்

பா.நிரோஸ்

நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், பாராளுமன்றத்தில் நேற்று (30) இடைக்கால வரவு- செலவுத்திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பட்ஜெட் உரை ஒரு மணிநேரத்துக்குள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது.

## அதிரடித் தீர்மானங்கள்

- அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயது 65 இல் இருந்து 60 ஆக குறைப்பு
- சமுர்த்தி உதவியை பெறும் 1.7 மில்லியன் குடும்பங்களுக்கான 5,500 ரூபாய் நிவாரணம், 7000 ரூபாய் வரை அதிகரிக்கப்படும்.
- அரச துறைக்கு எரிபொருளில் இயங்கும் வாகன இறக்குமதி இடை நிறுத்தம்
- அரச துறைப் பயன்பாட்டுக்கு மின்சார வாகனங்களை மாத்திரம் கொள்வனவு செய்ய வேண்டும்.
- போசாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட 61,000 குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூ.10,000 அடிப்படையில் 4 மாதங்களுக்கு வழங்க நடவடிக்கை
- மத்திய வங்கியில் அரசியலை நீக்கவும், பணம் அச்சிடுவதை நிறுத்தவும் புதிய சட்டம் அமல்படுத்தப்படும்.
- வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் கிளைகளை திறப்பதற்கு ஊக்குவிக்கும் வகையில் ஒழுங்குமுறைகளை திருத்தியமைக்க தீர்மானம்
- விநியோகச் சங்கிலியை வினைத்திறனாக மாற்ற சரக்கு ரயில் சேவையை ஹாலி எலவில் இருந்து கொழும்பு கோட்டைக்கு ஈடுபடுத்தல்
- இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் இருபது சதவீத பங்குகளை வைப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## பொருளாதாரம்

- சுற்றுலாப் பயணிகளை கவரும் புதிய இடங்களை அடையாளம் காண மற்றும் தேவையான வசதிகளை மேம்படுத்துதல்
- செப்டெம்பரில் இருந்து சுற்றுலா பயணிகளை கவரும் வண்ணம் விசேட நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- வெளிநாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களையும் தொடர்பு கொண்டு இலங்கை நிதியம் ஒன்று நிறுவப்படும்

## வரித் திருத்தம்

- செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) வரி 12 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக அதிகரிப்பு
- மின்சார சைக்கிள் தயாரிப்புக்கு தேவையான இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள், உபகரணங்களுக்கு வரிச்சலுகை

## அபிவிருத்தி

- வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட சில பிரதேச சபைகள் அருகிலுள்ள நகரசபைகளுடன் இணைக்கப்படுகின்றன
- கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக கிளையை குருநாகலில் நிறுவ உத்தேசம்
- உலக பல்கலைக்கழகங்களின் உதவியுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்

## புதிய முன்மொழிவுகள்

- 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறு முன்மொழிவு
- கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கும் ரூ.20,000 திற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூ. 2,500 வழங்க முன்மொழிவு

## வேலை வாய்ப்பு

- தொழில் இல்லாதவர்களுக்கு 20 ஏக்கர் காணி ஒதுக்கப்படும். அதில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு முன்னெடுக்கப்படும். அதற்காக 50 மில்லியன் ஒதுக்கப்படும்.
- முன்பயிற்சி அற்றோருக்கு பயிற்சி நிறுவனங்கள் ஊடாக அதிக பயிற்சி வழங்கி சான்றிதழ் வழங்குவதற்கு ரூ.200 மில்லியன் ஒக்கீடு செய்ய முன்மொழிவு
- உணவு மற்றும் குடிபான தயாரிப்பு உட்பட கைத்தொழில் செய்து வாழ்வாதாரம் நடத்துவோருக்கு பயிற்சி வழங்கி சான்றிதழ் வழங்க ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு செய்ய முன்மொழிவு



## அரச நிறுவனங்கள்

- வினைத்திறன் மிக்க செலவு முகாமைத்துவத்துக்கு அரச ஊழியர்களின் எண்ணிக்கையை சீர் செய்ய முன்மொழிவு
- வெளிநாடு செல்ல மற்றும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட விரும்பும் அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற ஓய்வு
- புதிய ஆட்சேர்ப்பின் போது அனைத்து அரச சேவைகளையும் உள்ளடக்கி 3 மாதத்துக்குள் பணி ஆய்வு செய்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும்
- அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத பொருட்களை அகற்ற (விற்பனை) குழு நியமனம்
- அரச நிறுவனங்களில் மோசடி மற்றும் ஊழலை தடுக்கும் அதிகாரம் கொண்ட பணிப்பாளர் நாயகத்தை நியமித்தல்

## ஒதுக்கீடு

- அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் அரசுடைமை தொழில் முயற்சிகள் மீள் கட்டமைப்பு அலகை ஸ்தாபிக்க ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு
- அரச மற்றும் தனியார் முதலீட்டு ஊக்குவிப்புக்கு அரச தனியார் பங்குபற்றுகை நிறுவனத்தை தாபிக்க ரூ.250 மில்லியன் ஒதுக்கீடு
- விவசாயத் திணைக்களத்தின் மூலம் நடவுப் பொருட்கள் மற்றும் விதைகளை வழங்குவதற்கான அவசர வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூ.400 மில்லியன் ஒதுக்கீடு

## புதிய சட்டங்கள் மற்றும் திருத்தங்கள்

- பொருளாதார வளர்ச்சி ஏற்பாடுகளுக்கு வசதியளிக்கும் குறுகிய கால மறுசீரமைப்புக்கு பொருத்தமான சட்டங்களை அறிமுகப்படுத்த யோசனை
- உணவுப் பாதுகாப்புச் சட்டமூலம்
- அரச ஆதன முகாமைத்துவ சட்டமூலம்
- பொருளாதார உறுதிப்பாட்டு சட்டமூலம்
- அரசாங்க சேவை ஊழிய சட்டமூலம்
- அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்
- பங்களிப்பு தேசிய ஓய்வூதிய நிதிய சட்டமூலம்
- வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு முகவராண்மை சட்டமூலம்

## நிவாரணம்

- இரண்டு ஹெக்டேயர் அல்லது அதற்கும் குறைவான காணிகளை வைத்து அரச வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளின் கடன் தள்ளுபடி
- சமையல் எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு எதிர்காலத்துக்கு தேவையான எரிவாயுவை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு
- உணவுப் பொதியிடலுக்கான உயர்தொழிநுட்பட உபகரணங்களை இறக்குமதி செய்யும்போது சுங்க தீர்வையில் 50% நிவாரணம்

# தீப்பிடிக்கும்வரை காத்திருக்கின்றனர்

எஞ்சியுள்ள அடுத்த நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு -செலவு திட்டம் மீதான ஆரம்ப உரையை நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் நேற்று (30) ஆற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நிலைமையை விளங்கிக்கொள்ளாத சிலர் தீப்பிடிக்கும் வரையில் காத்திருக்கிறார்கள். ஆனால் நிலைமைகளைப் புரிந்துக்கொண்டவர்கள் தீயை அணைக்க முயல்கின்றனர் என்றார்.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை தற்போது ஆட்சியில் உள்ள புதிய அரசாங்கம் திருத்தியுள்ளது. புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைப் பிரகடன உரையிலும் இந்த வருடத்தின் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கான அரசாங்கத்தின் செலவீனங்களுக்காக இடைக்கால வரவு- செலவு திட்டம் கொண்டுவரப்படும் எனக் கூறியிருந்தார்.

இதன்படி, எஞ்சியுள்ள அடுத்த நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு-செலவு திட்டத்தை சபையில் பிரதமர் தினேஸ் குணவர்தன சமர்ப்பித்திருந்தார். இதன்படி இடைக்கால வரவு செலவு திட்டம் மீதான ஜனாதிபதியின் உரையில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டன.



முன்னொருபோதும் இல்லாதவகையில் நாடு பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இது தொடர்பில் முன்பு பல தடவைகள் பேசியிருக்கிறேன். ஆனால் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை எவ்வளவு மோசமாகியுள்ளது என்பதை பலர் இன்னும் புரிந்துக்கொள்ளாமல் இருக்கிறார்கள் என்றார்.

நாடு 74 வருடங்களுக்கு பின்னோக்கி சென்றுள்ளதாக சிலர் கூறிக்கொண்டு போராடி வருகிறார்கள். தங்களது அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறு சிலர் கூறுவதே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம்.

வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் இலங்கை இதுவரையில் தவறான கொள்கையையே கொண்டிருக்கிறது. நாட்டின் வளங்கள் எனக் கூறிக்கொண்டு அந்த வளங்களைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளாது இருக்கிறோம்.

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு முதலில் சம்பிரதாய அரசியலை கைவிட வேண்டும். கடந்த காலத்தை எண்ணி சாபம் விடுவதாலோ அல்லது ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாலோ பிரச்சினையை தீர்க்க முடியாது. வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மறுசீரமைக்க பார்க்கிறோம். பாடசாலைகள், பல்கலைக்கழங்கள் மீள திறக்கப்பட்டுள்ளன. எரிபொருள், எரிவாயு என்பன தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகின்றன. எனினும் இதனால் திருப்தியடைய முடியாது. 25 வருடங்கள் பின்பற்றக்கூடிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்கி அதனை பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தேசிய பொருளாதார கொள்கை ஒன்றை நாம் உருவாக்கப் பார்க்கிறோம். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நிறைவுற்றதும் அது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பேன். அரசாங்கத்தின் வருமானம், தேசிய உற்பத்தி ஆகியவற்றை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

# மூன்று நாள் முழுநேர விவாதம்

பா.நிரோஸ்

இடைக்கால வரவு- செலவு திட்டம் மீதான ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் ஆரம்ப உரைக்காக பாராளுமன்றம் நேற்று (30) கூடியது.

இடைக்கால வரவு செலவு திட்டத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிந்துக்கொள்ளும் ஆர்வத்தில் ஆளும், எதிரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் சபை நிறைந்திருந்தது.

பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமான பாராளுமன்ற அமர்வை சபாநாயகர் மஹிந்த யாப்பா ஆரம்பித்து வைத்தார். இதன்படி 2021ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கான ஒதுக்கீட்டுத் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான ஆரம்ப உரையை நிதி அமைச்சர் ஆற்றுவார் என சபைக்கு சபாநாயகர் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க சபைக்குள் வந்தார். அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல்ல, மஹிந்த அமரவீர பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, படைக்களச் சேவிதர் உள்ளிட்டோர் ஜனாதிபதியை சபைக்கு அழைத்து வந்தனர். இதன்போது ஆளுந்தரப்பினர் ஆசனத்திலிருந்து எழுந்து கரகோசங்களை எழுப்பி ஜனாதிபதி ரணிலை வரவேற்றனர்.

உரைக்குப் பின்னர், இன்று (31) காலை 9.30 வரையிலும் சபை ஒத்திவைக்கப்பட்டது. இந்த இடைக்கால வரவு செலவு திட்டம் மீதான விவாதம் இன்றும், நாளையும் (01) நாளை மறுதினம் (02) என மூன்று நாட்கள் முழுநாள் விவாதமாக முன்னெடுக்கப்பட உள்ளது.

# ஆதரவு தாருங்கள்

வ.சக்தி

தினமும் காட்டு யானைகளின் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் நிலையில், எனது சிறிய வீட்டையும் காட்டுயானை தாக்கி உடைத்துவிட்டது. என்ன செய்வதென அறியாது மன விரக்தியின் மத்திக்கத்தில் வாழ்ந்து வருகின்றறேன் என தெரிவித்த கவிதா, ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு, படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள திக்கோடைக் கிராமத்தில் கணவரைப் பிரிந்து, தனது 13 வயது மகளுடன் வாழ்ந்து வரும் கவிதா. தனது குடும்ப வறுமை நிலைமை காரணமாக தனது பிள்ளையை ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையம் ஒன்றில் விட்டு கற்பித்து வருகின்றார்.

இந்நிலையில் தான் எதுவித வருமானமுமின்றி இருக்க முடியாது என சிந்தித்து ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து அதிலிருந்து கிடைத்த வருமானத்தில் சிறிய வீடொன்றை அரை குறையாக கட்டியுள்ளதோடு தனது உடல் சுகயீனம் காரணமாக தற்போது அந்த வேலைக்கும் அவர் செல்வதில்லை.

இந்நிலையில் வெளியிடங்களுக்குச் சென்று



வீட்டு வேலைகளைச் செய்து அதிலிருந்து கிடைக்கும் வரமானத்தில் வாழ்ந்து வரும் கவிதாவின் வீட்டை அண்மையில் காட்டு யானை தாக்கி துவம்சம் செய்துள்ளது.

எதுவித வேலி பாதுகாப்புக்களோ, மலசலகூட வசதியோ இன்றி வாழ்ந்து வரும் தனக்கு ஒரு மலசல கூடத்தையும், யானையால் தாக்கி அழிக்கப்பட்டுள்ள தனது வீட்டையும் புணரமைத்துத்தர யாராவது முன்வருமாறு கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.



## பேதமின்றி பணியாற்றும் மனப்பாங்கு வேண்டும்

எஸ். பாக்கியநாதன்

தாங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்காக, சேவை வழங்குனர்களை பொதுமக்கள் நாடிச்செல்லும்போது இனம், மதம். மொழி, சமூக அந்தஸ்து மற்றும் அரசியல் வேறுபாடு இன்றி பணியாற்றக்கூடிய மனப்பாங்கு இருக்கவேண்டுமென செயலமர்வில் வலியுறுத்தப்பட்டன.

இனங்களிடையே தேசிய நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் மனிதர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படுவதோடு நிறைவேற்றும் திறனும் காணப்படும். அரசியல் வாதிகளிடத்திலும் ஜனநாயகத்தை மதிக்கும் பண்பு மலர வேண்டுமென வலியுறுத்தினர்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையினால் நடாத்தப்பட்ட செயலமர்வு மட்டக்களப்பு கூட்டுறவு மண்டபத்தில் நேற்று (30) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் தலைவர் ஆர்.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் சமன் செனவிரட்ன மற்றும் ரஷ்கா செனவிரட்ன ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

## வேலைத்திட்டம் ஆரம்பமாகும்

எப்.முபாரக்

சமூக ஒன்றிணைவு குறித்து பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் குறித்த வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு திருகோணமலை ஜெகோப் பீச் ஹோட்டலில் நேற்று (30) நடைபெற்றது. பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம கலந்து சிறப்பித்தார்.

நாடு தற்போது பொருளாதார ரீதியாக நெருக்கடிகளினை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் திருகோணமலை மாவட்டத்தில் மக்களது ஜீவனோக செயற்பாட்டை வலுப்படுத்த சில உதவிகளினை வழங்கி வருகின்றார்கள். இவ்வேலைத்திட்டத்தில் மிக கஷ்டமான பிரதேசங்களும் உள்ளடக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. இவ்வேலைத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

## ஜித்தாவில் அமைச்சர் சந்தித்துப் பேச்சு

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



சவுதி அரேபியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஜித்தாவில் இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பு மாநாடு (OIC) அமைப்பின் பொருளாதார விவகாரங்களுக்கான பதில் செயலாளரும் பிரதிச் செயலாளருமான அஹமட் செங்கெண்டோவை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பில் தூதுவர் முசா குலக்லிகாய, நிருவாக மற்றும் நிதிப்பிரிவின் உதவிச் செயலாளர் நாயகம், ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதியின் விசேட தூதுவராக சவுதி அரேபியா சென்றுள்ள அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் நடத்திய இந்த சந்திப்பின் போது சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் பக்கீர் முஹமட் அம்சா மற்றும் கொன்சியுலர் ஜெனரல் SMA. பலாஹ் மௌலானாவும் உடனிருந்தனர்.

## உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்

ஆர்.ஜெயஸ்ரீராம்

'இலங்கையின் வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' என்ற தொணிப் பொருளிலான கவனயீர்ப்பு போராட்டம் மட்டக்களப்பு தன்னாமுனை வீதி செங்கலடியில் நேற்று (30) நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் நெறிப்படுத்துனர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் சுழற்சி முறையில் 100 நாட்கள் செயல் முனைவு போராட்டமானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் 30 ஆவது நாள் போராட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் தன்னாமுனையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் ஒன்று கூடிய மக்கள் தங்களது பிரதேசத்தில் இடம்பெறும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக கோஷங்களை எழுப்பியவாறும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டியும் குரல் எழுப்பினர்.

'நடமாடுவது எங்கள் சுதந்திரம் ஒன்று கூடுவது எங்கள சுதந்திரம், 'பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை', 'வேண்டும் வேண்டும் வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும்' உள்ளிட்ட வாசகங்களை எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வடக்கு மீனவர்களின்

## பிரச்சினைகளை உடன் தீர்க்கவும்

### தொடர் கைதுகளை கைவிடவும் கோரிக்கை

எம்.றொசாந்த்




வடக்கு மீனவர்களின் பிரச்சனைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்ற தற்போதைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து, ஆட்சி மாற்றத்துக்காக போராடியவர்களை கைது செய்வதனை கைவிட வேண்டும் என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஜேசுதாசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (30) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இளைஞர்கள் போராடி ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து செயற்பட்டு, கொடுங்கோல் ஆட்சியை மாற்றி, புதிய ஜனாதிபதியை மாற்றியுள்ளார்கள்.

"தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மஹிந்தவின் ஆட்சியினுடைய நிழல் ஆட்சியை செய்து கொண்டிருக்கிறாரா என்ற கேள்வி காணப்படுகின்றது.

"அனைவரும் எதிர்பார்த்தார்கள் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தபோது பொருளாதார ரீதியில் மாற்றம் ஏற்படும் என்று. ஆனால், அவ்வாறு இடம்பெறவில்லை. மக்கள் மீண்டும் தொடர்ச்சியாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

"வட மாகாண கடற்தொழிலாளர் இணையமும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து குறிப்பாக மீனவர்களை பாதிக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஊடகம் வாயிலாக ஆட்சியாளர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக மீனவ சமூகங்களின் கோரிக்கைகளை முன் வைப்பதற்காக கலந்துரையாடி இருக்கின்றோம்.

"கடந்த 30 வருட காலமாக யுத்தத்தின் காரணமாக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதே சுவடுகளை அதே துன்பங்களை சுமந்தவர்களாக தொடர்ச்சியாக வடக்கு மீனவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

"எனவே, வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

போதைப்பொருள் நுகர்ந்த

## பெண்கள் இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் பாழடைந்த வீடொன்றில் மறைந்திருந்து போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த இரு பெண்களை, யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 2 கிராம் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், பொம்மை வெளி பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீடொன்றில் நேற்று முன்தினம் (29) இரவு பெண்கள் போதைப்பொருளை நுகர்வதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார், அங்கு போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த இரு பெண்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரும் 28 மற்றும் 29 வயதுடையோர் எனவும் , அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில்

## தங்க சங்கிலியை அறுத்த இருவர் யாழில் சிக்கினர்

எம்.றொசாந்த்

கிளிநொச்சி மாவட்டத்தில் தங்க சங்கிலியை அறுத்த இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி-இரத்தினபுரம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீதியால் சென்ற பெண்ணின் தங்க சங்கிலியை, மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அறுத்துச் சென்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (29) யாழ். நகர் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் நகை ஒன்றை விற்பனை செய்ய முற்பட்ட இருவர் தொடர்பில் நகைக் கடை உரிமையாளர்கள் சந்தேகமடைந்து, அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அதனை அடுத்து இருவரையும் கைது செய்த பொலிஸார், அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த போது, இருவரும் கிளிநொச்சியில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டவர்கள் எனவும், அவ்வாறு வழிப்பறி கொள்ளையடிக்கப்பட்ட ஒன்றரை பவுண் சங்கிலியையே விற்க முற்பட்டனர் எனவும், தெரியவந்துள்ளது.

அர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகையை மீட்டுள்ளதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

## பாண் உற்பத்தியில் அரிசி மாவை கலவை

எம்.றொசாந்த்



கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக கோதுமை மாவுடன் அரிசி மாவை கலந்து பாண் உற்பத்தியில் யாழில் சில வெதுப்பகங்கள் ஈடுபட்டுள்ளதாக யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் க.குணரட்ணம் தெரிவித்தார்.

யாழில் நேற்று முன்தினம் (29) நடத்திய ஊடக சந்தி ப்பிலையே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கோதுமை மாவின் விலை தற்போது அதிகரித்துள்ளது. அதனால் பாணின் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

"நாடளாவிய ரீதியில் இன்று வரை இரண்டாயிரத்திற்கும் அதிகமான வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளன.

"முட்டை விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கும் பாவனையாளர் அதிகார சபையினர், கோதுமை மாவின் விலைகள் தொடர்பிலையோ, பதுக்கல்கள் தொடர்பில்லையோ கவனம் செலுத்தவில்லை.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஒரு கிலோ மா 360 ரூபாய்க்கும் அதிக விலையில் விற்கப்படுகிறது. அதனால் எதிர்வரும் நாட்களில் பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலைமைக்கு நாங்கள் தள்ளப்படுவோம்.

"பாணின் விலையை அதிகரிக்காது சிலர் பாணின் நிறையை குறைக்கக்கூடும். அதனால் முரண்பாடான நிலைமை ஏற்படும்.

தற்போது சிலர் கோதுமை மாவுடன் அரிசி மாவை கலந்து பாண் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். அது மக்கள் மத்தியில் வெற்றி அளிக்கும் பட்சத்தில் தொடர்ந்து அரிசி மா கலந்து பாண் உற்பத்தியில் ஈடுபட தீர்மானித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் எதிர்வரும் 15 நாட்களுக்குள் கோதுமை மா தட்டுப்பாட்டை நீக்குதல், விலை குறைப்பு ஆகியவற்றை உரிய தரப்புப்புகள் தலையிட்டு தீர்க்காவிட்டின், வெதுப்பகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்படும்" என்றார்.

## மீன்குஞ்சுகள் விடப்பட்டன...

முல்லைத்தீவு - மல்லாவி வவுனிக்குளத்தினுள் மீன்குஞ்சுகள் விடும் செயற்பாடு இராணுவத்தினரால் நேற்று முன்தினம் (29) முன்னெடுக்கப்பட்டன.

65ஆவது காலாட்படைப் பிரிவினரின் ஆலங்குளம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த நிகழ்வில், மாந்தை கிழக்கு உதவி பிரதேச செயலாளர் ஜெபமயூரன், ஆலங்குளம் ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் எடிரிசூரியா, மற்றும் பாலிநகர் ராணுவ அதிகாரி லேப்னன்ட் கேணல் சூரியாராச்சி, இராணுவத்தினர்கள் மற்றும் அம்பாள்புரம் கிராம் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள் - செ.கீதாஞ்சன்)





பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம்

# அதிகரிக்க வேண்டும்

## கடிதம் அனுப்பினார் வடிவேல் எம்.பி

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமானது, சம்பள நிர்ணய சபை ஊடாக அதிகரிக்கப்பட வேண்டும் என, தொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடியினால் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து கொண்டிருக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளத்தை சம்பள நிர்ணய சபையினூடாக 3250 ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடிதம் நேற்று(30) தொழில் அமைச்சில் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபையின் செயலாளர் H.G.வசந்த குணவர்தன, தொழில் அமைச்சின் செயலாளர் R.P.A.விமலவீர, தொழில் திணைக்கள ஆணையாளர் நாயகம் B.K.பிரபாத் சந்திர கீர்த்தி ஆகியோருக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் மற்றும் சங்கத்தின் உப தலைவர் சுஜித் சஞ்சய பெரேரா சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் மூலம் இக்கடிதம் கையளிக்கப்பட்டது.

இக்கடிதத்தை ஏற்ற தொழில் அமைச்சின் அதிகாரிகள், உடனடியாக சம்பள நிர்ணய சபையினை அழைத்து, இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசித்து தீர்வை பெற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தனர் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.



உடபுஸ்ஸலாவை பஸ் விபத்தில்

## 27 பேர் காயம்

■ சந்ரு, ரஞ்சித் ராஜபக்ஸ,ஆ. ரமேஸ்

உடபுஸ்ஸலாவையிலிருந்து மட்டகளப்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானாதில் 27 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் 6 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதால் அவர்கள் நுவரெலியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் வலப்பனை பிரதேச வைத்தியசாலை மற்றும் ரிக்கிலகஸ்கட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று (30) காலை 10.30 மணியளவில் வலப்பனை- மஹவ பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டகளப்பிலிருந்து உடபுஸ்ஸலாவையில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, மீண்டும் மட்டகளப்பு நோக்கி திரும்பியவர்களே இந்த விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை வலப்பனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





## 109 ஆவது ஜனன தினம்...



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தினமான நேற்று (30) செவ்வாய்கிழமை பழைய பாராளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. (பி.கேதீஸ்)

## பலாங்கொடையிலும் வரிசை நீளுகிறது

■ எம்.குமார்

பலாங்கொடை ஐ,ஓ,சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (30) அதிகாலை முதல் நீண்ட வரிசையில் எரிபொருளுக்காக வாகனங்கள் காத்திருந்தன.

ஓட்டோ, கார்கள், மோட்டார் சைக்கிள்கள், லொறிகள் உள்ளிட்ட பல வாகனங்கள் அதிகாலை தொடக்கம் நீண்ட வரிசையில் காத்திருந்தன.

பலாங்கொடை நகரில் நான்கு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளதுடன் அதில் ஒரு எரிப்பொருள் நிரப்பு நிலையத்தில் மாத்திரமே நேற்று (30) எரிபொருள் காணப்பட்டதுடன்,



மீதமுள்ள மூன்று எரிப்பொருள் நிரப்பு நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன.

உ/த பெறுபேறுகளில்

## டியன்சின் த.ம.வி. சாதனை

■ எஸ் சதீஸ்

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்று முடிந்த 2021ம் ஆண்டுக்கான க.பொ.த(உ/த) பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய, பொகவந்தலாவ டியன்சின் த.ம.வித்தியாலயத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 15 பேரில் செ.பிரஜாலினி 3A சித்திகளைப் பெற்று, பெற்று மாவட்ட மட்டத்தில் கலை பிரிவில் 11ம் இடம் பிடித்துள்ளார்.

S.சானுஜன் 3A சித்திகளைப் பெற்றுள்ளதோடு கலைபிரிவில் மாவட்ட மட்டத்தில் 26 ஆம் இடத்தையும் D.பிரின்சிலா 2A,1B சித்திகளைப் பெற்றுள்ளார். J.கனிஸ்டெலா 3B சித்திகளையும் R.கிர்சாந்தி 2B 1C ம் சித்திகளையும் பெற்றுள்ளனர்.

பாமஸ்டன் தோட்டத்துக்கு

## தனியார் பஸ் சேவை ஆரம்பம்

■ பி.கேதீஸ்

தலவாக்கலை நகரிலிருந்து பாமஸ்டன் தோட்டத்திற்கு தனியார் பேருந்து சேவையொன்று சங்கராஜா நினைவு அறக்கட்டளை ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 250 குடும்பங்கள் வாழும் பாமஸ்டன் தோட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழில் துறைகளுக்கு செல்லும் மக்களின் நலன் கருதி இந்த தனியார் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



## ரயிலில் மோதி ஒருவர் பலி

■ ராமு தனராஜா

பதுளையில் இருந்து நேற்று (30) செவ்வாய்க்கிழமை காலை 5 .55 மணியளவில் கொழும்பு கோட்டையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த உடரட்ட ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை -தெய்வனெவெல பகுதியில் உள்ள சுரங்கத்துக்கு அருகாமையில் வைத்தே இவ்வாறு மோதுண்டு மரணமடைந்துள்ளார்.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆண்ணொருவரே மரணமடைந்துள்ளார். அவர் ரயிலின் முன் பாய்ந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அடையாளம் காணமுடியாத வகையில் முகம் உள்ளிட்ட உடல்பகுதிகள் சேதமடைந்துள்ளனர் என்பதனால், உடனடியாக அவரை அடையாளம் காணமுடியவில்லை எனத் தெரிவித்த பதுளை பொலிஸார், சடலம் சடலம் தற்போது பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றனர்.

## 400 லீற்றர் டீசலுடன் பயணித்த லொறி மடக்கிப் பிடிக்கப்பட்டது

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி- மாத்தளை வீதியில் அக்குறணை நகரில் வைத்து லொறி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 400 லீற்றர் டீசலை அலவத்துகொடை பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, அக்குறணை நகரில் வைத்து குறித்த லொறி சோதனையிடப்பட்டுள்ளது.

இதன்போது லொறியிலிருந்து 400 லீற்றர் டீசல் அடங்கிய இரண்டு பரல்கள் கண்டெடுக்கப்பட்டதுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இன்று (31) கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.



எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தம்

## பாடசாலை போக்குவரத்து சேவைகள் முடங்கும் அபாயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பாடசாலை சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்கள் மற்றும் வேன்களுக்கு ஹட்டன் இ.போ.ச டிப்போ மூலம் பல நாட்களாக எரிபொருள் விநியோகிக்கப்படாமை காரணமாக, பாடசாலை சேவைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஹட்டன் பிரதேச பாடசாலை சேவை வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டிப்போ மூலம் தமது வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படாமை காரணமாக, QR முறை மூலம் வாரத்துக்கு ஒரு தடவையே எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதாகவும் இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் எரிபொருளால் 2 நாட்களுக்கு மாத்திரமே சேவையில் ஈடுபடு முடிவதாகவும் பாடசாலை போக்குவரத்து சேவை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.



தமது வாகனங்களை லீசிங் முறையில் கொள்வனவு செய்துள்ளதால் மாதாந்த லீசிங் கட்டணங்களை குறித்த போக்குவரத்து சேவையால் கிடைக்கும் வருமானத்தை வைத்தே செலுத்துவதாகவும் தற்போதைய நிலையில், அந்த வருமானத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

ஹட்டன் டிப்போவால் பாடசாலை போக்குவரத்து சேவைகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படாமை குறித்து ஹட்டன் டிப்போவின் முகாமையாளரிடம் வினவியபோது, தமது டிப்போவிலிருந்து சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு தேவையான எரிபொருள், கொட்டகலை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து உரிய முறையில் விநியோகிக்கப்படவில்லை என்றும் இதனால் தனியார்போக்குவரத்து சேவைகளுக்கு எரிபொருளை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார்.

வயது குறைந்த தொழிலாளர்களுக்கு

## கட்டாயமாக ஓய்வு

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை ஹைபொரஸ்ட் இலக்கம் மூன்று தோட்டத்தில் வேலை செய்யும் 45 வயதுக்கு குறைந்த தொழிலாளர்களை, தொழிலில் இருந்து ஓய்வுப் பெற்று, ஓய்வூதியப் பணத்தை பெறுமாறு, அத்தோட்ட நிர்வாகம் பலவந்தப்படுத்துவதாக வலப்பனை பிரதேச சபையின் ஹைபொரஸ்ட் வட்டார இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி உறுப்பினர் பழனி சௌந்தராஜன் தெரிவித்தார்.

500க்கு அதிகமாக தொழிலாளர்கள் பணியாற்றிய இந்த தோட்டத்தில் நிர்வாக கெடுப்பிடி,வருமான குறைவு காரணமாக பலர்



தோட்டத் தொழிலைக் கைவிட்டுள்ள நிலையில், தற்போதைய தோட்ட நிர்வாகம் செய்து 140 ஹெக்டயர் தேயிலை நிலத்தை, 88 தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கியுள்ளது.

இவ்வாறு பிரித்து வழங்கிய தேயிலை மரங்களை தொழிலாளர்கள் பராமரித்து அதில் கொய்யப்படும் தேயிலையை நிர்வாகம் பெற்று வந்தது.

தற்போது 52 தொழிலாளர்கள் மாத்திரமே தேயிலை தொழிலில் ஈடுப்பட்டு வரும் நிலையில், அவர்களுள்

42 வயது தொடக்கம் 45 வயதுக்கு உட்பட்ட 25 தொழிலாளர்களை தொழிலில் இருந்து விலகி தமக்கான சேவைக்காக பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு தோட்ட நிர்வாகம் பலவந்தப்படுத்துகிறது.

எனவே, இத்தோட்ட மக்களின் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தோட்ட நிர்வாகத்தின் செயற்பாட்டை தான் வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# குறைபாடுகள் பெரும் தடைகள் அல்லவென நிரூபிப்பு

ஒவ்வோர் அனுபவமும் வாழ்க்கையில் பல பாடங்களைக் கற்பிக்கும் என்பதை அனுபவங்களின் ஊடாகவே புரிந்துகொள்ள முடியும். அதற்காகப் பல தடைகளைத் தாண்டவேண்டும். மாணவர்களைப் பொறுத்தவரையில், தேசிய பரீட்சைகளே முக்கியமான தடை தாண்டல்களாகும்.

தற்போது வெளியாகியிருக்கும் 2021ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம், பரீட்சைக்குத் தோற்றிய அத்தனை பரீட்சார்த்திகளும் தங்களுடைய திறமைகளை சுரண்டிப் பார்த்துக்கொண்டனர். பலரும் தடையைத் தாண்டியுள்ளனர். சிலருக்கு கைகூடவில்லை. எனினும், தாங்களும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிப்பதற்கு இன்னும் காலமிருக்கிறது.

ஒவ்வொரு படியையும் தாண்டும் போது, வெற்றி - தோல்விகள் இருக்கத்தான் செய்கின்றன. பயணிக்கும் பாதையில், எவ்விதமான பிரச்சினைகளும் இடையூறுகளும் இன்றிப் பயணிக்கின்றோம் என்றால், மற்றுமொருவரின் அடிச்சுவட்டில் பயணிக்கின்றோம்; இல்லையேல், புதிதாக எதையும் பரீட்சித்துப்பார்க்க முயலவில்லை என்பதே அர்த்தமாகும்.

மாணவர்களைப் பொறுத்தவரையில், ஏதோவொரு புதிய விடயத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றனர். பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான வெட்டுப்புள்ளியை, தாங்கள் கடக்கவில்லையென சோர்ந்து போகக் கூடாது. ஏனெனில், கொரோனா உள்ளிட்ட பல்வேறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தே, இம்முறை பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்; அவர்களின் முயற்சிகளுக்குப் பாராட்டு.

‘முயற்சி திருவினையாகும்’ வரையிலும் முயன்று கொண்டே இருப்பதுதான் மாணவர்களுக்கு அழகு. ஆகையால், முயற்சியை ஒருபோதும் கைவிட்டுவிடாதீர்கள். இந்தப் பரீட்சையில், இரண்டு கைகளுமின்றி, இடது காலால் பரீட்சை எழுதிய மாணவி, மூன்று பாடங்களிலும் அதிதிறமை சித்தியைப் பெற்றுள்ளார். ஆக, அங்க குறைபாடுகள் வெற்றிக்குத் தடைகள் அல்லவென அம்மாணவி நிரூபித்துள்ளார்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், ஐந்தாம் தர புலமைப் பரீட்சை, கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, உயர் தரப் பரீட்சை ஆகியன முக்கிய மூன்று தடை தாண்டல்களாகும்.

ஆகையால், உயர் தரப் பரீட்சையின் எல்லைக் கோட்டை கடக்காதவர்கள், மீண்டுமொரு தடவை முயல வேண்டும். வாழ்க்கைக்கு ஒரு பாடமாக தோல்விகளை எடுத்துக்கொள்ளவேண்டும்; தளர்ந்துவிடக்கூடாது. கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள், ஏனைய துறைசார் கல்வியை பயில்வதற்கு முன்வரவேண்டும்.

அதேபோல, பெரும் நகரங்களில் சாதாரண தொழில்களில் ஈடுபடுத்திக்கொள்வதற்காக, பலரையும் கவர்ந்திழுக்கும் வகையில் பிரச்சாரங்களை முன்னெடுக்கக்கூடும். அவற்றை எல்லாம் கருத்தில் எடுக்காது. கற்றுக்கொண்டே முன்னேறுவதற்கான பாதையைத் தேடிக்கொள்ள வேண்டும்.

தோல்வி அடைந்துவிட்டோம் என மனம் சோர்ந்து, சாதாரண வேலைகளுக்குச் சென்றுவிட்டால், கடந்து வந்த 12 ஆண்டுகளுக்கு, எவ்விதமான பிரயோசனமும் கிடைக்காது. எதிர்காலத்தையும் வெறுமனே கடந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

இதுவும் கடந்த காலத்தைச் சேர்ந்தவர்களின் அனுபவ பகர்வாகும் என்பதை நினைவில் கொண்டு, வெற்றிக்கான படிக்கற்களாக குறைபாடுகளை மாற்றிக்கொண்டு, அதில் பயணிக்க வேண்டுமென வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

செய்த வினைகள் விதியாகின்றன. மனிதன் தானேதான் தனக்கான விதியை உருவாக்குகின்றான்.

விதி, முற்பிறப்பு மூலம் உருவாகின்றது என்பது, மனிதனுக்கு ‘இந்தப் பிறப்பில் நல்லனவற்றைச் செய்’ என அறிவுறுத்துவதாகும். இன்று செய்யும் நல்ல செயல்களின் பலன், காலஓட்டத்தில் சிறப்பாக இருக்கும் என்பதை, நம்பிக்கையுடன் மனதில் நிறுத்தவும்.

விடயங்களைச் சொல்வதற்கு எச்சரிக்கை தேவைப்படுகின்றது. சில விடயங்களை, அமைதியாக, மென்மையாகச் சொன்னால் கேட்கமாட்டார்கள். தவறு செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிப்பது, இயற்கையான தேவையாகிவிட்டது.

தானாக எல்லாமே நடப்பதில்லை; சில சாரியங்கள் வலிந்தும் நடக்கலாம். எல்லா இன்ப, துன்பங்களையும் சமமாகக் கருதுவது சிரமமானது. எனினும், வலிமைமிகு நெஞ்சத்தை உருவாக்க வேண்டும்; தியானம் அவசியமாகும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இலங்கையை காப்பாற்றுமா சீனா?



எம். எஸ். எம் ஐயூப்

கடந்த சில வாரங்களுக்கு முன்னர், எரிபொருள் விநியோக நிலையங்கள் அருகே காணப்பட்ட நீண்ட வரிசைகள், இப்போது காணக்கூடியதாக இல்லை. இப்போது, சில இடங்களில் வரிசைகள் காணப்பட்ட போதிலும், அப்போது போல், அவை நாள்கணக்கில் நீடிப்பதில்லை.

சமயல் எரிவாயுவை வாங்குவதற்கும் இப்போது வரிசையில் நிற்கத் தேவையில்லை. தேவையான நேரத்தில், எரிவாயு கடைகளுக்குச் சென்று வாங்க முடியும்.

ஆனால், இவற்றால் பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிட்டதாக ஆறுதல் அடைய முடியாது. இவை தற்காலிக நிலைமைகளாகும். வெளிநாடுகளில் இருந்து, இலங்கை பெற்ற கடனுக்காக வருடமொன்றுக்கு வட்டி உட்பட சுமார் 6 பில்லியன் டொலர் (216,000 கோடி ரூபாய்) திருப்பிச் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டு செலாவணி இல்லாமையால், இந்தக் கடன்களை இப்போதைக்கு திருப்பிச் செலுத்த முடியாது என்று, மத்திய வங்கி கடந்த மே மாதம் அறிவித்துவிட்டது. ஒரு நாடு இவ்வாறு அறிவித்தால், அந்நாடு வங்குரோத்து அடைந்ததாகவே கருதப்படும் என்று பொருளியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், கடனைத் திருப்பிச் செலுத்தாமையால், திறைசேரியிடம் அந்தளவு இல்லாவிட்டாலும் ஓரளவு வெளிநாடுப் பணம் மீதமாகிறது. அதனால், தற்போது இறக்குமதிகளுக்குத் தேவையான வெளிநாட்டுப் பணம் கிடைத்துக் கொண்டு இருப்பதாக, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அண்மையில் கூறினார். அதுவும் வரிசைகள் குறைவதற்குக் காரணமாகும். இது தீர்வல்ல; நாளை, இப்போது செலுத்த வேண்டிய தவணையையும் சேர்த்து, அரசாங்கம் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டும்.

வரிசையில் நிற்பது குறைந்தாலும், விலைவாசி உயர்வதைத் தடுக்க அரசாங்கத்தால் முடியாமல் இருக்கிறது. மின்கட்டணமும் நீர் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பாணின் விலை 300 ரூபாயாகலாம் என, பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

கடந்த பெரும் போகத்தைப் போலவே, இம்முறை சிறு போகமும் உரத்தட்டுப்பாட்டால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மின்துண்டிப்பு நேரமும் நீடிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இப்போது அரசாங்கத்துக்கு, இந்தப் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, ஒரேயொரு வழி தான் இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்று, வெளிநாட்டு கடன்களை மறுசீரமைத்துக் கொள்வதே அந்த வழியாகும். கடன் மறுசீரமைப்பின் மூலம், கடனைத் திருப்பிச் செலுத்தும் தவணைக் காலத்தை ஒத்திப் போட்டுக் கொள்வதும், வட்டியில் ஒரு பகுதியை இரத்துச் செய்வதும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதையடுத்து, சர்வதேச நாணய நிதியத்திடம் ஒரு கடனைப் பெற்று, அதைப் பாவித்து, அந்நிதியத்தின் ஆலோசனைப்படி, இலங்கை அரசாங்கம் தமது கையிருப்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அந்தப் பணத்தைக் கொண்டு, வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையை ஓரளவுக்கு சமாளித்துக் கொண்டு, விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் உல்லாசப் பிரயாணத்துறைக்கும் தேவையான மூலப்பொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். அதன்மூலம், வெளிநாட்டு செலாவணி கையிருப்பை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் தற்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி அரசாங்கம், கடந்த ஏப்ரல் மாதம் முதல், நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது. ஏப்ரல் மாதம் அரச அதிகாரிகளும் நாணய நிதியத்தின் அதிகாரிகளும் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். மே மாதம், இணையவழி மூலம் பேச்சுவார்த்தை நடத்தினர். இம்மாதமும் நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கைக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இவை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளாகும். அவற்றின்படி, நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினர், இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக முடிவு செய்வர்.

நிதியத்தின் அதிகாரிகளுடனான பூர்வாங்க இணக்கப்பாட்டின் பின்னர், நிதியத்திடம் கடன் தொகையைப் பெற முடியும். ஆயினும், கடனை மீளச்செலுத்தும் திறன், தற்போது இலங்கையிடம் இல்லாமையால், இந்த வசதியை செய்து கொடுப்பதற்கு முன்னர், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளிடம், தொடர்ந்து கடன் வழங்குவது தொடர்பான உத்தரவாதத்தைப் பெற வேண்டும் என்று நாணய நிதியம் கூறுகிறது.

இந்த விடயத்தில்தான், இலங்கை தற்போது சிக்கிக் கொண்டு இருக்கிறது. சர்வதேச நாணய நிதியம் பிரச்சினையில் தலையிட்டு இருப்பதால், அனேகமாக கடன் வழங்கிய நாடுகள், இந்த உத்தரவாதத்தை வழங்கலாம். ஆயினும், இலங்கைக்கு வழங்கிய கடனை மறுசீரமைக்க, சீனா தயாரில்லை. தம்மிடம் கடன் பெற்ற ஒரு நாட்டுக்கு, அவ்வாறு சலுகை வழங்கினால், தம்மிடம் கடன் பெற்ற ஏனைய நாடுகளுக்கும் அதே சலுகைகளை வழங்க வேண்டியிருக்கும் என்பதாலேயே, சீனா அந்த நிலைப்பாட்டில் இருக்கிறது. அதற்குப் பதிலாக சீனா, தம்மிடம் பெற்ற கடனை அடைப்பதற்காக, மற்றொரு கடனை வழங்குகிறது.

ஆயினும், ஒரு நாட்டுக்கு இந்தச் சலுகையை வழங்கியமைக்காக, சீனா மற்றொரு நாட்டுக்கும் அதனை வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு நாடு, இலங்கையின் தற்போதைய நிலைமையைப் போல், பொருளாதார ரீதியாக தலையைத் தூக்க முடியாத மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டால் மட்டுமே, கடன் மறுசீரமைப்புச் செய்யும் நிலை ஏற்படுகிறது.

அண்மையில் ஈக்குவடோர் உள்ளிட்ட ஓரிரு நாடுகள், சர்வதேச நாணய நிதியத்தின் மூலமாக, ஏனைய நாடுகளின் கடன்களை மறுசீரமைத்துக் கொண்டன. அதற்காக, ஈக்குவடோருக்கு கடன் வழங்கிய நாடுகள், தாம் கடன் வழங்கிய அத்தனை நாடுகளினதும் கடன்களை மறுசீரமைக்கவில்லை.

இலங்கை விடயத்தில், சீனாவின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாவிட்டால், இலங்கை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும். இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகளும், இலங்கைக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைக்க முன்வரா!

அந்த நாடுகள், தொடர்ந்து கடன் வழங்கவும் முன்வரமாட்டா. அந்நாடுகள் தொடர்ந்து கடன் வழங்கத் தயாராக இருந்தால் மட்டுமே, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை, இலங்கைக்கு அவசர கடன் வழங்குவதை அனுமதிக்கும் என அண்மையில் அந்நிதியம் அறிவித்தது. இது இலங்கையைப் பொறுத்தவரை மிகப் பயங்கரமான நிலைமையாகும்.

இதேவேளை, கடன் மறுசீரமைப்புக்குப் பதிலாக, சீனாவிடம் கடன் பெற்று, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் சீனா கேட்கிறது என்றும் ஒரு செய்தி அண்மையில் வெளியாகி இருந்தது. ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், கொழும்பில் தாமரைக் கோபுரம் போன்ற திட்டங்களுக்கு சீனாவே கடன் வழங்கியது. அந்தத் திட்டங்கள், இதுவரை தோல்வியடைந்த திட்டங்களாகவே இருக்கின்றன.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எதிர்ப்பார்க்கப்பட்டதைப் போல் கப்பல்கள் வருவதில்லை. மத்தள விமான நிலையத்தில், விமானமொன்று தரையிறங்கினால் அது ஊடகங்களில் செய்தியாகிறது. தாமரைக் கோபுரம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. இவற்றுக்காக கடன் பெற்றே, இலங்கை இந்தளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதற்கு சீனாவைக் குறைகூற முடியாது. இவற்றின் வெற்றி தோல்வியையும் அவற்றை பயனுள்ள முறையில் பாவிப்பது எவ்வாறு என்பதையும், இலங்கையின் தலைவர்களே முதலில் மதிப்பிட்டு இருக்க வேண்டும். எனினும், இலங்கைத் தலைவர்கள் அவற்றின் மூலம், தாம் தனிப்பட்ட முறையில் பெறும் பயன்களையே முதன்மையாக கருத்தில் கொண்டனர். நாடு, கடன் பொறியில் சிக்குவதை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

ஜப்பானும் இந்தியாவும் இந்த விடயத்தில், இலங்கைக்கு உதவி வழங்க தயாராக இருக்கின்றன. இலங்கையின் வேண்டுகோளின் பேரில், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளின் மாநாட்டைக் கூட்டி, இலங்கைக்கு சாதகமான முடிவொன்றை எடுக்க ஜப்பான் தயாராக இருக்கிறது. இந்தியா ஆரம்பத்திலிருந்தே, இலங்கை தொடர்பான நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்தது.

சீனாவின் நிலைப்பாடு எதுவாயினும், சர்வதேச நாணய நிதியம், இலங்கையை கைவிட்டுவிடும் என்று எந்தவொரு பொருளியல் நிபுணரும் கூறுவதில்லை. சீனாவின் நிலைப்பாடு காரணமாக, சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவிகளைப் பெற, இலங்கைக்கு மேலும் ஆறு மாதங்களாவது செல்லும் என்று, கடந்த வாரம் நடைபெற்ற பொருளியல் நிபுணர்களின் கூட்டமொன்றின் போது, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட சிலர், கருத்துத் தெரிவித்தனர். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வியாபார பொருளியல்த்துறை திணைக்களமே அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கடிதங்கள்

### கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கான பொறுப்பு வைத்திய அதிகாரியை நியமிக்க கோரிக்கை

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு, தகுதி வாய்ந்த பொறுப்பு வைத்திய அதிகாரி நியமிக்கப்படாது உள்ளதுடன், மத்திய சுகாதார அமைச்சால் இதுவரை காலமும் வெற்றிடமாகக் காட்டப்பட்டு வந்த பதவி வெற்றிடமும் மாகான அமைச்சால் நீக்கப்பட்டுள்ளமையானது பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

வட மாகாணத்தின் தொடர் யுத்தம் காரணமாக, பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட பொது வைத்தியசாலைக்கான தேவைகளை நிறைவு செய்வதிலும் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதிலும், மத்திய மற்றும் மாகான அரசுகள் பின்னடித்து வருகின்றன.

குறிப்பாக, மாவட்ட பொது வைத்தியசாலைக்கான நிரந்தர பொறுப்பு வைத்திய அதிகாரி நியமிக்கப்படாத நிலை தொடர்தும் காணப்படுகின்றது. அதாவது, சிரேஷ்ட மருத்துவ நிர்வாக உத்தியோகத்தர் (Senior medical administrative Grade) தரத்திலுள்ள ஒருவரை நியமிக்க வேண்டிய நிலையில், தற்போது மருத்துவ உத்தியோகத்தர் (Primalary Grade ) தரத்திலுள்ள ஒருவரே பொறுப்பிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில், கடந்த காலங்களில் தொடர்சியாக மத்திய சுகாதார அமைச்சால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான பதவி வெற்றிடம் காட்டப்பட்டு வந்துள்ளது. ஆனால், அதற்கான வெற்றிடம் நிரப்பப்படாமலே, தற்போது பதவி வெற்றிடம் நீக்கப்பட்டுள்ளது

மாவட்ட பொது வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சிவில் சமூக அமைப்புகளும் பொது அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

–யது பாஸ்கரன்

புதுடெல்லி

இந்தியாவில் 2021 விபத்துகளில்

# 1.73 இலட்சம் பேர் பலி

## உயிரிழப்பில் தமிழகம் 2வது இடம்

நாட்டிலேயே அதிகமான வீதி விபத்து உயிரிழப்புகள் ஏற்படும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் 2 ஆவது இடத்தில் உள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (என்சிஆர்பி) 2021 அறிக்கை வெளியாகியுள்ளது. அதன்படி நாட்டில் 2021ல் இடம்பெற்ற 4.22 இலட்சம் வீதி விபத்துகளில் 1.73 இலட்சம் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 24,711 பேர் இறந்துள்ளனர். அடுத்தபடியாக தமிழகத்தில் 16,685 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல் 2020ல் 3,68,828 ஆக இருந்த சாலை விபத்துகள் 2021ல் 4,22,659 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



2021ல் மொத்தம் நடந்த 4,22,659 விபத்துகளில் 4,03,116 விபத்துகள் சாலையிலும், 17,933 ரயில் விபத்துகளாகவும், 1,550 விபத்துகள் ரயில் தண்டவாளம் கடக்கும் போதும் நடந்துள்ளன. இவற்றில் முறையே சாலையில் 1,55,622 உயிரிழப்புகளும், ரயில் விபத்துகள் 16,431 ஆகவும், தண்டவாள விபத்துகள் 1807 ஆகவும் உள்ளன.

வொஷிங்டன்

# அமிதாப்புக்கு உருவச்சிலை

அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளி குடும்பம் ஒன்று, தன் வீட்டு வாசலில், பாலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சனின் முழு உருவச் சிலையை நிறுவியுள்ளது.\ அமெரிக்காவின் நியூ ஜெர்சியைச் சேர்ந்தவர் கோபி சேத். குஜராத்தைச் சேர்ந்த இவர், 1990ல் அமெரிக்காவில் குடியேறினார். இன்ஜினியரான சேத், அமிதாப் பச்சனின் தீவிர ரசிகர். அவருக்காக, 'பிக் பி எக்ஸ்டெண்டட் பேமிலி' என்ற இணையதளத்தை, கடந்த 30 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.\|\|

இந்நிலையில், அவர் தன் வீட்டு வாசலில், அமிதாப் பச்சனின் முழு உருவச் சிலையை ஆடல், பாடல் நிகழ்ச்சிகளுடன் சமீபத்தில் திறந்து வைத்தார். இந்த சிலை, 'கோன் பனேகா குரோர்பதி' நிகழ்ச்சியில், அமிதாப்பச்சன் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.



# அப்பளம் சண்டையில் மூவர் படுகாயம்



திருமண வீடொன்றின் விருந்துபசாரத்தின் போது, அப்பளத்தால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில், மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

அங்கு ஹரிப்பாடு முட்டம் பகுதியிலுள்ள திருமண மண்டபமொன்றில், திருமணம் இடம்பெற்றது.

திருமணம் முடிந்ததும் அந்த மண்டபத்திலேயே விருந்து தொடங்கியது. அப்போது பந்தி பரிமாறியவர்கள் மாப்பிள்ளையின் தோழர்களுக்கு அப்பளம் வைக்கவில்லை. இதனை ஒருவர் கேட்டபோது அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

மாப்பிள்ளையின் நண்பர்களுக்கே அப்பளம் இல்லையா? என்று மாப்பிள்ளையின் உறவினர்களும் அங்கே திரள, விருந்து நடந்த மண்டபம் களேபரமானது. அப்போது மாப்பிள்ளை நண்பர் ஒருவர் மேஜை, நாற்காலிகளை அடித்து உடைக்க அதனை பெண் வீட்டாரும், மண்டப ஊழியர்களும் தட்டி கேட்டனர்.

இதில் பிரச்சனை பெரிதாக அங்கு கோஷ்டி மோதல் ஏற்பட்டது. மாறிமாறி இரு தரப்பினரும் மோதிக" கொள்ள மண்டப ஊழியர்கள் உள்பட 3 பேர் படுகாயம் அடைந்தனர். இதனை கண்டு மண்டபத்தில் இருந்த உறவினர்கள் சிதறியடித்து பதறியோடினர்.

புதுடெல்லி

ரூ.12 ஆயிரத்துக்கும் கீழுள்ள

# சீன அலைபேசிகளுக்கு விற்பனை தடை இல்லை

ரூ.12 ஆயிரத்துக்கும் கீழ் விலையுள்ள சீன அலைபேசிகளை விற்பனையை தடை செய்யும் எந்த திட்டமும் இல்லை என்று மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீன அலபேசிகளில் குறிப்பாக ஸியோமி கார்ப் குறைந்த விலை ஸ்மார்ட்போன் விற்பனையில் கோலோச்சியுள்ளது. உலக அலைபேசி சந்தையில் இந்தியா 2 ஆவது இடத்தில் இருக்கிறது. இந்தியச் சந்தை தான் ஸியோமி, ரியல்மி போன்ற நிறுவனங்களுக்கு இந்தத் தடை அமலுக்கு வந்தால் அது மிகப்பெரிய பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.

ஏற்கெனவே, ஸியோமி, ஆப்போ, விவோ போன்ற அலைபேசி விற்பனை நிறுவனங்களின் நிதி மேலாண்மையை கண்காணிப்பு வளையத்துக்குள் மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. ZTE கார்ப், ஹுவேய் டெக்னாலஜிஸ் கோ மொபைல் நிறுவனங்களுக்கு மத்திய அரசு கெடுபிடி விதித்தது.

இப்போது, ரூ.12 ஆயிரத்துக்கும் கீழ் விலையுள்ள சீன போன் விற்பனையை தடை செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக சில தினங்கள் முன்தகவல்கள் வெளிவந்தன.

ஆனால் அப்படி, எந்த திட்டமும் மத்திய அரசிடம் இல்லை என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ராஜீவ் சந்திரசேகர் உறுதிப்படுத்தியுள்ளார்.

விசாகப்பட்டினம்,

# கிண்டல் செய்தவரின் சடலத்தை தாயின் காலடியில் வீசிய மகன்

ஆந்திரமாநிலம் விசாகப்பட்டினம் பகுதியை சேர்ந்த ஒருவர், அப்பகுதியை சேர்ந்த பெண்ணொருவரை மதுபோதையில் கிண்டல் செய்துள்ளார். இதனால் மன உளைச்சல் அடைந்த அந்தப் பெண், இந்த சம்பவம் குறித்த தனது மகனுடன் தெரிவித்துள்ளார். ஆத்திரமடைந்த மகன், தனது தாயை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு அந்நபர் இருக்கும் இடத்திற்கு வந்துள்ளார். இதனை கண்டு பயந்துபோன அந்தநபர், அங்கிருந்து தப்பியோடினார். அப்போது அவரை விடாமல் துரத்தி சென்ற அந்த வாலிபர், ஓடஓட விரட்டி கல்லால் அடித்து கொலை செய்தார். அதில், ஆத்திரம் தீராத அந்த வாலிபர், கொலை செய்யப்பட்ட சீனுவின் உடலை தரதரவென சாலையில் இழுத்து வந்து தனது தாயின் காலடியில் வீசினார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கொலையாளி தப்பியோடிவிட்டார். அவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

புதுடெல்லி

# 'ஹிஜாப்' விவகார வழக்கு இரு தரப்புக்கும் நோட்டீஸ்

கர்நாடகாவில் மாணவியர், 'ஹிஜாப்' அணிய விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை மனுதாரர்கள் ஒத்திவைக்க கோரியதை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கடுமையாக கண்டித்தனர். கர்நாடகாவிலுள்ள, பாடசாலைகள், கல்லூரிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியர், முகம் மற்றும் தலையை மறைக்கும், 'ஹிஜாப்' எனப்படும் துணியை அணிய மாநில அரசு பெப்ரவரியில் தடை விதித்தது. இந்த தடையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை, கர்நாடகா உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 24 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விரைவாக விசாரிக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில், இந்த மனுக்களை விசாரிக்க பட்டியலிடப்பட்டது. ஆனால், விசாரணையை ஒத்திவைக்க கோரி மனுதாரர்கள் தரப்பில் கடிதம் அனுப்பப்பட்டது.

# மட்டக்களப்பில் போராட்டங்கள்

சர்வதேச வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் தினம் நேற்றாகும். அதனையொட்டி, வட, கிழக்கில் பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களை கண்டறிய பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி, மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (30) போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வட, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு பேரணியும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

காந்திபூங்காவிலிருந்து வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவினர்கள் கலந்துகொண்ட பேரணியானது ஆரம்பமாகி, மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையம் ஊடாக தந்தை செல்வா சதுக்கம் வரையில் சென்றதுடன், அங்கு ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அனுப்பிவைப்பதான மகஜரும் வாசிக்கப்பட்டதுடன், வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளும் வெளியிடப்பட்டது.

(படங்கள் - வா.கிருஸ்ணா)







# யாழில் போராட்டம்









சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி, யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் உள்ள UNHCR அலுவலகம் முன்பாக நேற்று (30) காலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைகழக மாணவ பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் - எம். றொசாந்த்)





# புதுக்குடியிருப்பு நகரில்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதியான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாரிய அளவிலான மக்கள் போராட்டம், நேற்று (30) முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரிய தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் 2,000 நாட்களை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - சண்முகம் தவசீலன்)









# கடையடைப்பு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் புதுக்குடியிருப்பு நகரில் நேற்று (30) இடம்பெற்ற மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் அனைவரும் ஆதரவு வழங்குமாறும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.


புதுக்குடியிருப்பு நகரில் உள்ள அனைத்து வர்த்தக நிலயங்களையும் காலை முதல் நண்பகல் 12 மணிவரை மூடி ,போராட்டத்துக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாகவும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்க தலைவர் நவநீதன் தெரிவித்திருந்தார்அ

தற்கமைய, நேற்றுக் காலை முதல் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் உள்ள வணிக நிலையங்களை மூடி வர்த்தகர்கள் பூரண ஆதரவு வழங்கினர்.


(படங்கள் - சண்முகம் தவசீலன்)














ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர்:

# வெளியேற்றப்பட்ட ஸ்டெபனோஸ், ஹலெப்




ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, உலகின் ஐந்தாம் நிலை வீரரான ஸ்டெபனோஸ் சிட்டிபாஸ், ஏழாம் நிலை வீராங்கனையான சிமோனா ஹலெப் ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தின முதல்நாள் போட்டியொன்றில், தனது முதலாவது சுற்றுப் போட்டியில் கொலம்பியாவின் டானியல் எலஹி கலானை எதிர்கொண்ட கிரேக்கத்தின் சிட்டிபாஸ் 0-6, 1-6, 6-3, 5-7 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இதேவேளை, தனது முதலாவது சுற்றுப் போட்டியில் உக்ரேனின் டரியா ஸ்னிகரை எதிர்கொண்ட றோமானியாவின் சிமோனா ஹலெப் 2-6, 6-0, 4-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

## வலைன்சியாவில் இணைந்த கவானி



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான வலென்சியாவில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் முன்களவீரரான எடின்சன் கவானி இணைந்துள்ளார்.

35 வயதான கவானி, யுனைட்டெட்டுக்காக 41 போட்டிகளில் 12 கோல்களைப் பெற்றுள்ளார்.

நெஸ்டமோல்ட் சைக்கிள் சவால்:

## சிறப்பு ஆண்கள் பிரிவில் வென்ற அவிஷ்க மடோன்ஸா

வாரயிறுதியில் நடைபெற்ற நெஸ்டமோல்ட் சைக்கிள் சவால் போட்டியின் 48 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆண்களுக்கான சிறப்பு பிரிவில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அவிஷ்க மடோன்ஸா வென்றிருந்தார்.

இரண்டாமிடத்தையும் இராணுவத்தைச் சேர்ந்த சண்டருவன் பின்டோ பெற்றதோடு, மூன்றாமிடத்தையும் இராணுவத்தைச் சேர்ந்த பிரபாஷ் மதுஷங்க பெற்றிருந்தார். நான்காம், ஐந்தாமிடங்களையும் இராணுவத்தைச் சேர்ந்த துஷான் ராஜபக்ஷ, நிரான் பசிந்து ஆகியோர் பெற்றிருந்தனர்.

பாடசாலை மட்ட கடினபந்து கிரிக்கெட்:

## மாத்தறை தாருல் உலூம் சாதனை

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் கடினபந்து கிரிக்கெட் தொடரில், 15 வயதுக்குட்பட்ட மூன்றாம் பிரிவு முதற்சுற்றுப் போட்டிகளில் மாத்தறை வலயத்தில் கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று மாத்தறை தாருல் உலூம் பாடசாலை சாதனை படைத்துள்ளது.

முதலாவது சுற்றில், மாத்தறை மகா வித்தியாலயம், றாகுல கல்லூரி, பாலட்டுவ மத்திய மகா வித்தியாலயம், உயங்கொட தேசிய பாடசாலை ஆகியவற்றுடனான போட்டிகளில் வென்று அடுத்த சுற்றுக்கு தாருல் உலூம் பாடசாலை தகுதி பெற்றுள்ளது.

தாருல் உலூம் பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். மிப்தாஹ், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் எம்.எல். ராஜிடீன், கிரிக்கெட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் எம்.எஸ்.எம். ராதி ஆகியோரின் வழிகாட்டலுடன் பாடசாலை பிரகாசித்து வருகிறது.

இரண்டாவது சுற்று போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகிறன.



சீனா

# தாக்குதலுக்குத் தயார்

## தாய்வானை எச்சரிக்கும் சீனா



தாய்வானை சீனா சொந்தம் கொண்டாடி வரும் வேளையில் கடந்த இரண்டாம் திகதி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி சீனாவின் எதிர்ப்பை மீறி தைவானுக்கு சென்றிருந்தார்.

அத்துடன் அவரைத் தொடர்ந்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவின் இன்டியானா மாகாண கவர்னர் உள்ளிட்ட அமெரிக்காவின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் அடுத்தடுத்து தாய்வானுக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதனால் ஆத்திரமடைந்திருக்கின்ற சீனா அடிக்கடி தாய்வனை சுற்றி கடல் மற்றும் வான் பரப்பில் போர் பயிற்சி ஈடுபட்டு வருவதோடு, தாய்வான் மீது தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாகவும் எச்சரித்து வருகின்றது.

இச் சூழலில் தங்கள் நாட்டில் எல்லையில் சீனா தனது போர்க்கப்பல் மற்றும் விமானங்களை குவித்திருப்பதாக தாய்வான் இராணுவம் குற்றம் சாட்டியிருக்கின்றது.

இது பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது," சீன ராணுவத்தின் எட்டு விமானம் தாக்கி போர்க்கப்பல்கள், 25 விமானங்கள் தாய்வானை சுற்றி நிறுத்தப்பட்டு இருக்கிறது. மேலும் நிலைமை உன்னிப்பாக கவனித்து வரும் தாய்வான் இராணுவம் பதில் நடவடிக்கைக்கு தயாராக இருக்கிறது" எனக் கூறப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## 20 அடி உயரத்தில் தொங்கிய மகள்

### சூப்பர் ஹீரோவாக மாறிய தந்தை

பிரித்தானியாவில் சவுத் போர்ட்டில் இருக்கும் ப்ளேஷர்லேண்டி பூங்காவில் ஒரு ரோலர் கோஸ்டரில் திடீரென்று பழுது ஏற்பட்டது.

இதனால் சுமார் 20 அடி உயரத்தில் ஒன்றரை மணி நேரங்களாக குறித்த ரோலர் கோஸ்டர் அந்திரத்தில் நின்றதால் அதில் இருந்த சிறுவர்கள் அச்சமடைந்து அழ ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது ஒரு சிறுமி மயங்கிய நிலையில் காணப்பட்டதைக் கண்ட அவரின் தந்தை உடனடியாக அதன் மீது வேகமாக ஏறினார்.

அங்கு சென்று தன் மகளை இறுக்கமாக கட்டியணைத்துக் கொண்டார். இதனையடுத்து உடனடியாகச் செயற்பட்ட பராமரிப்புக் குழுவினர் அப் பகுதிக்கு சென்று, அதிலிருந்த 19 பேரைப் பாதுகாப்பாக மீட்டனர்.

எனினும் மீட்பு நடவடிக்கையின் போது ஒரு சிறுமியின் தலையில் காயம் ஏற்பட்டதாகவும் இதனையடுத்து அவர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரேசில்

மற்றுமொரு பழங்குடியினம் அழிந்தது

## கடைசி மனிதனின் சடலம் மீட்பு

பிரேசில் அருகே உள்ள அமேசான் காட்டுப்பகுதியில் வாழ்ந்து வந்த பழங்குடியின மக்களின் கடைசி மனிதர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார்.


1970 இல் இருந்து 1995க்குள் நில அபகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் அமேசான் காட்டில் வாழ்ந்துவந்த பழங்குடியின மக்கள் பலர் கொல்லப்பட்ட நிலையில், குறித்த நபர் சுமார் 26 வருடங்களாக தனியாக அக் காட்டில் வசித்து வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் 1996 ஆம் ஆண்டு FUNAI (Fundao Nacional dondio)அமைப்பிற்கு இவர் உயிருடன் இருப்பதும் தனியாக அந்தக் காட்டில் வசித்து வருவதும் தெரிய வந்துள்ளது. எனினும் அவருடன் எந்த ஒரு தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாதபடி மறைந்து வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 23ஆம் திகதி அவரது குடிசைக்கு வெளியே சடலமாகக் கிடந்துள்ளார்.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க அவரது இறப்பிற்கு எந்த ஒரு தாக்குதலும் காரணம் இல்லை என்றும் இயற்கையாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் அவரது உயிரிழப்பானது மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்கா

## 100 வருட பழமையான கல்லறை

### திடீரென வெளியே வந்த தலைமுடியால் பரபரப்பு

கலிபோர்னியாவில் உள்ள Sacramento என்ற பகுதியில் சுமார் 100 வருடங்கள் பழமையான ஒரு கல்லறை அமைந்துள்ளது.

இந்நிலையில் குறித்த கல்லறையைப் பார்ப்பதற்காக ஜோயல் மாரிசன் என்பவர் அண்மையில் சென்றிருந்தார். இதன் போது குறித்த கல்லறையில் இருந்து திடீரென் ஒரு பெண்ணின் தலைமுடி வெளியே வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த ஜோயல் கல்லறையில் இருந்து வெளியே வந்த தலைமுடி யாருடையது என்பதை சோதித்து பார்ப்பதற்காக அதிலிருந்து சிறிய மாதிரியை எடுத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்.



மேலும் அந்த கல்லறைக்கு அருகே இருக்கும் மரத்தின் வேர்கள் நீண்டு கல்லறையை பாதித்திருக்கலாம், அல்லது ஏதாவது ஒரு விலங்கு தலைமுடியை கல்லறையில் இருந்து வெளியே இழுத்து இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 31 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.